1970 மார்ச் 10]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீல னையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தமிழ்நாட்டிலே பெரிய மாவட்டங்களில் ஒன்றாகவும், நிலவரி மிகுதியாக வசூலிக்கப்படும் மாவட்டமாகவும் உள்ள தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு இனியே னும் அரசு முயற்சிக்குமா? சென்னை ராஜ்யம் என்பது தமிழ்நாடு என்று வழங்கப்படுவதுபோல் தற்போதுள்ள மாவட்டங்களின் பெயர்களுக்குப் பதிலாக சோழ மாவட்டம், பாண்டிய மாவட்டம், பல்லவ மாவட்டம், கொங்கு மாவட்டம் என்று மாற்றப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பெரிய ஆபத்தாக இருக் கிறது. கிட்டப்பா அவர்கள் சோழ மாவட்டம் என்று சொன்னால் (திரு. பொன்னப்ப நாடார் அவர்களைச் சுட்டிக்காட்டி) இவர்கள் சோநாடு என்று சொல்லக்கூடிய நிலைமைக்குப் போய்விடும். பொதுவாக மாவட்டங்கள் நிர்வாகச் சௌகரியங்களுக்காகப் பிரிக் கப்படுகின்றன. இருபது பிளாக்குகள்தான் ஒரு மாவட்டத்தில் இருக்க வேண்டுமென்றும், 20 லட்சம் மக்களுக்கு ஒரு மாவட் டத்தை அமைக்கவேண்டுமென்றும் மாவட்ட நிர்வாகக் கமிட்டி பரிந்துரை செய்திருக்கிறது. இவை எல்லாம் சரித்திரபூர்வமான மாவட்டங்கள். சில மாவட்டங்கள் பிற்போக்கான நிலையில் இருக் கின்றன. சில மாவட்டங்கள் தொழில் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு புது மாவட்டங்கள் அமைக் கப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை அப்படிப் பட்ட யோசனை எதுவும் இல்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திரு. கிட்டப்பா அவர் களுடைய கேள்வியின் முதல் பகுதி நிர்வாக வசதிக்காக தஞ்சை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படுமா என்பது. பிறகு சோழ மாவட்டம் என்று அவர் சொல்லும்போது தஞ்சையையும் திருச்சி யையும் இணைக்கச் சொல்லுகிறாரா? இதில் எதை அரசு ஏற்றுக் கொள்வது என்று புரியவில்லை.

Inclusion of temporary service for pension.

*291 Q.—THIRU N. S. V. CHITHAN: **Will the Hon. the Minister for Finance be pleased to state whether there are proposals under the consideration of the Government to include temporary service for pension to Government servants?**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நிலையான அல்லது தாற் காலிகப் பதவியில் அரசுப் பணியாளர் ஒருவர் ஆற்றிய தற்காலிகப் பணிக்கால அளவு முறைப்படியாக இருப்பினும் இராவிடினும் அதை ஊப்பூதியத்திற்குச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அனுமதித்து அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இதுமாதிரி தற்காலிகமாக வேலை செய்தவர்களது பணிக்காலத்தையும் இந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்வதன் காரணமாக அரசாங்கத்திற்கு எவ்வளவு அதிகப் பணம் செலவாகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பென்ஷன் கணக்கு அவ் வப்போது ஓய்வூதியத்திற்கு அருகதை உடையவர்களாக ஆகின்ற வர்களைப் பொறுத்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்--விடைகள் முடிவுற் றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) வினுக்களை விடையளிக்க எடுத்துக் கொள்ளாதது குறித்து.

திரு. சோ. அழகர்சாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்தச் சட்டசபை ஆரம்பித்ததில் இருந்து பல கேள்விகளை நான் அனுப்பி இருக்கிறேன். ஒரு கேள்வி கூட இதுவரை வரவில்லை. கேள்வி போட்டு கூட்டுத் தொடர் முடிந்த பிறகு அவற்றைப் புதுப் பிக்க வேண்டுமென்றும் எழுதியிருக்கிறேன். ஒரு கேள்வி கூட இது வரை வராததற்குக் காரணம் என்ன? சிறு கட்சி என்பதற்காக கேள்வி வராமல் இருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. கொடுத்த கேள்வி வரவில்லை என்ருல் பேரவைத் தலைவருடைய அறையில் வந்து கேட்க வேண்டும். இதிலே பெரிய கட்சி, சிறிய கட்சி என்று பார்ப்பது இல்லை. கேள்விகள் அனுமதிக் கப்பட்டவுடன் அமைச்சர்களின் இலாகாக்களுக்கு அனுப்பப்படு கின்றன. அங்கிருந்து விடைகள் சட்டமன்ற அலுவலகத்திற்கு வந்தவுடன் அந்தக் கேள்விகள் அவைக்கு வரும்படி ஏற்பாடுகளைச் செய்து வருகிருர்கள். இவ்வளவு கேள்விகள் அமைச்சர்களிடம் இருக்கின்றன. விரைவில் பதிலை அனுப்ப வேண்டுமென்று ஒவ் வொரு அமைச்சருக்கும் தனித் தனியாக அலுவலகத்திலிருந்து எழுதப்படுகிறது. வந்தவுடன் இந்த அவைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இதிலே எந்தவிதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை. திரு. அழகர்சாமி அவர்கள் கொடுத்த கேள்விகளில் 22 கேள்விகள் புதிய கேள்விகள், நான்கு கேள்விகள் புதுப்பிக்கப் பட்ட கேள்விகள். மொத்தம் 26. அனுமதிக்கப்பட்டவை 17; ஐந்து கேள்விகள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. நான்கு கேள்வி கள் உறுப்பினர் அவர்களுக்கு விளக்கம் கேட்டு திருப்பி அனுப்பப் பட்டிருக்கின்றன. எதற்கும் விடை வரவில்லை. விடை வராத காரணத்தால் அவைக்கு வரவில்லை.